www.tamilarangam.net

சிறுவர்

# அமுதம்

19.03.97

ண்ணம்: 8 எண்ணம்: 3



சிறுவர் இலக்கிய மாத சஞ்சிகை.

KINDERLITERARISCHES MAGAZIN

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# உறுதி! உறுதி! உறுதி!



உண்மை பேச நானுமே
 உறுதி கொண்டேன். ஆயினும்
சின்னச் சின்னப் பொய்களைத்
 தினமும் ஏனோ சொல்கிறேன்.

"எந்தன் மாமா லண்டனில்
 இருக்கிறாரே, தெரியுமா?"
என்று நானும் புளுகுவேன்.
இதிலே பெருமை கொள்ளுவேன்.

நல்ல பாம்பு, பாம்பென
 நண்பர் கூடி இருக்கையில்

www.tamilarangam.net

சொல்வேன். அவர்கள் யாவரும்
துடித்தே ஓட மகிழுவேன்.

கவனக் குறைவால் நானுமே
கண்ணாடியை உடைத்த பின்
தவறு தங்கை செய்ததாய்த்
தந்தையிடத்தில் கூறுவேன்.

எனக்குப் படிப்பில் போட்டியாய்
இருக்கும் கோபு, முரளியின்
கணக்கைக் காப்பி அடித்ததாய்க்
கதையும் கட்டி விடுகிறேன்.

அன்னை தூங்கும் வேளையில்
ஆசையாக லட்டையே
தின்று விட்டு யார் அந்தத்
திருடன் என்று தேடுவேன்.

✪

தினம் தினம் இப்படி நான் சொன்ன
சிறுசிறு பொய்கள் எத்தனையோ?
கணக்கே இல்லை. இதற்கெல்லாம்
காரணம் என்ன? நானறிவேன்.

பெருமைக்காகப் பொய் சொன்னேன்
பிறரை ஏய்க்கப் பொய் சொன்னேன்
அடிக்குப் பயந்து பொய் சொன்னேன்.

www.tamilarangam.net

ஆத்திரத்தாலே பொய் சொன்னேன்.
ஆசையாலும் பொய் சொன்னேன்.
ஐயோ! தினமும் பொய் சொன்னேன்.

✪

இப்படித் தினம்தினம் பொய் சொன்னால்
எவர்தான் என்னை நம்பிடுவார்?
தப்பிதம் அன்றோ? இதை நானும்
சரியாய் உணர்ந்தேன். எப்போது?

காந்தித் தாத்தா வரலாற்றைக்
கருத்துடன் இன்று படிக்கையிலே,

உண்மை ஒன்றே இவ்வுலகில்
உயர்ந்தது, மிகவும் உயர்ந்ததென

உணர்ந்தேன். இனிமேல் எப்போதும்
உத்தமர் காந்தி வழி நடப்பேன்.

சோதனை பற்பல தோன்றிடினும்
தொல்லைகள் தொடர்ந்து வந்திடினும்

உண்மை ஒன்றே பேசிடுவேன்
உறுதி! உறுதி! உறுதி!

✪

–அழ.வள்ளியப்பா–

www.tamilarangam.net

# மகாபாரதம்

அதிரதன் கர்னனை எந்தவொரு குறையுமில்லாமல் வளர்த்து வந்தான். கர்னனும் அவர்களையே தன் தாய் தந்தையராாக எண்ணிக் கொண்டு வாழ்ந்து வந்தான்.

பாண்டுவுக்குக் குழந்தைகள் பிறந்திருந்த வேளையில், அஸ்தனாபுரத்தில் அரசனான திருதராஷ்டிரனுக்கு நூறு குழந்தைகள் பிறந்தன. குழந்தைகளை வளர்ப்பதற்குத் தாதிகள் இருந்தனர். திருதராஷ்டிரனின் குழந்தைகளைக் "கௌரவர்கள்" என்றும், பாண்டுவின் குழந்தைகளைப் "பாண்டவர்கள்" என்றும் அழைத்து வந்தார்கள். வனத்தில் வாழ்ந்த பாண்டுவும், அரசனான திருதராஷ்டிரனும் மக்களைப் பெற்ற மகிழ்ச்சியில் வாழ்ந்து வந்தார்கள்.

பிதாமகரான வீஷ்மர் மிகவும் ஆனந்தப் படலானார். சந்திர குலத்தின் பரம்பரையின் வளர்ச்சியைக் கண்டு

www.tamilarangam.net

அஸ்தனாபுரத்து மக்கள் அனைவரும் மகிழ்ந்தனர். ஆனால் அந்த மகிழ்ச்சி நீடிக்கவில்லை. வனத்தில் வாழ்ந்த பாண்டு முனிவர் ஒருவரின் சாபத்தால் இளவயதிலேயே இறந்து விட்டான். தன் கணவன் இறந்தவுடனேயே மாத்திரி தானும் பெற்ற பிள்ளைகளைக் குந்தியிடம் ஒப்படைத்து விட்டுத் தானும் இறந்து விட்டாள்.

வீஷ்மர் இதனால் பெரிதும் வேதனைக்குள்ளானார். அமைச்சராகப்



www.tamilarangam.net

பொறுப்பேற்றிருந்த விதுரனின் உதவியோடு, குந்திதேவியையும் குழந்தைகளையும் அரண்மனைக்கு வரவழைத்துக் கொண்டார். அரண்மனையில் உள்ள வேலையாட்களும், நகர மக்களும் கணவனை இழந்திருந்த குந்திதேவியிடத்திலும், தந்தையில்லாத குழந்தைகளிடத்திலும் கொண்ட அனுதாபத்தால் அவர்களிடம் அன்பாக நடந்து கொண்டார்கள். இது அன்னையாகிய காந்தாரிக்கும், கௌரவர்களுக்கும் மிகவும் பொறாமையாக இருந்தது.

பாண்டவர்களும் கௌரவர்களும் வளர்ந்தனர். அரச குருவாகிய கிருபர் அரசகுமாரர்களுக்கு கல்வி கற்பித்தார். அவர்களுடைய வளர்ச்சியைக் கண்டு வீஷ்மர் மகிழ்ச்சி அடைந்தார். அவர்கள் அறிவும் திறமையும் உள்ளவர்களாக விளங்க வேண்டுமல்லவா? கிருபரின் மைத்துனரான துரோணர் என்னும் அந்தணரை அவர்களுக்கு ஆசிரியராக நியமித்தார். துரோணர் கல்வியில் மட்டுமல்ல, சிறந்த போர்க்கலையிலும் வல்லவர். அரசகுமாரர்களுக்குத் துரோணர்

www.tamilarangam.net

கல்வி கேள்விகளோடு போர்க்கலையையும் கற்பித்து வந்தார்.

இதேவேளையில், கர்னன் பரசுராமர் என்னும் முனிவரிடத்தில் வில்வித்தை பயின்று ஊரே மெச்சும் வண்ணம் சிறந்த வில்வீரனாக விளங்கினான். சிறந்த வில்வீரனாக விளங்கிய கர்னன் கேட்பவர்களுக்கு இல்லை என்று சொல்லாமல் வாரி வளங்கும் வள்ளலாகவும் விளங்கினான். ஆனாலும் அவன் மனத்தில் ஆறாத வேதனை ஒன்று இருந்து வந்தது. வளர்ந்து வரும் வேளையில், தன் வரலாற்றை அறிந்து கொண்டான். தன்னைப் பெற்றெடுத்த தாய் யார்? தன்னை ஏன் கங்கையில் விட்டாள்? என்பது தான் அது.

"கங்கையில் அனாதையாக நான் பெற்ற மகனை விட்டேனே! அவன் எங்கிருக்கின்றானோ! பெற்ற மகனுக்குச் செய்த பாவந்தான் என்மக்களுக்குத் தந்தையில்லாது போயிற்றோ!" என்று தனக்குள்ளேயே வருந்தியவாறு குந்திதேவியும் கலங்கினாள். கர்னனைக் காணும் வேளைகளில் தன்னை அறியாமல்

www.tamilarangam.net

இவனாக இருக்குமோ? என்று பெற்றமனம் கலங்கியது.

☐ பிதாமகர் என்பவர், மூன்று, நான்கு பரம்பரையைக் கண்டு வாழ்பவர் என்பது கருத்தாகும்

ஜ

கவலைப் பட்டுக் கொண்டே இருந்தால் வாழ்வில் மாற்றத்தைக் காண இயலாது. "இன்று நல்லநாள்" என்ற உறுதியுடன் செயல் பட்டுக்கொண்டே இருந்தால் வாழ்வில் உயர்வு ஏற்படும்.

– ஹிப்னாடிக் –

ஜ

நேரத்தை யாராலும் தடுத்து நிறுத்த முடியாது. அது அதிவேகமாகக் கடந்து சென்று விடும். விழிப்புடன் இருந்து நம்முடைய புதிய திட்டங்கள் அனைத்தையும் தொடக்கிச் செய்வதற்கு மிக நல்ல நேரம் இப்போது தான். தாமதங்கள் அனைத்தும் ஆபத்தானவை.

– சின்மயானந்தா –

www.tamilarangam.net

# வினாவிடைப்போட்டி முடிவு

1. கழித்தல் அடையாளத்தை உலகிற்கு அறிமுகம் செய்தவர்கள் இவர்கள்.
இஸ்லாம், பத்திரிகை, தாளம்பூ வல்லினம், பயம், மலர்ச்சி (இத்தாலியர்)

2.ஓவியாரான இவரின் கண்டுபிடுப்புக்கள் கல. நமிடம் காட்டும் கடிகாரம் கூட இவரின் கண்டு பிடிப்புத்தான்.
லிகிதம், சயனம், மன்னர், கர்ச்சனை, பட்டோலை, பட்டாளம், பல்லவி, யன்னல், சித்திரை.
(லியர்னைடோ டாவின்சி)

3.உலகத்தின் பணக்கார நாடுகளில் முதலாவது இடத்தைப் பெற்றுக் கொண்ட நாடு இது?
இலட்சியம், பக்கம், ஸ்பானியா, பாசம், மிச்சம், பேராசை, போர், சொர்க்கம் (லக்ஸ்சம்பேர்க்)

4. இந்து சமுத்திரத்தின் முத்து என்று நாடு பிடித்தோர்களால் (ஐரோப்பியர்களால்) வர்ணிக்கப் பட்ட நாடு இது?
இன்பம், பலரபம், குங்குமம், செயற்கை. (இலங்கை)

5.ஐரோப்பாக்கண்டத்தில் சனத்தொகை அதிகமாக உள்ள நாடு இது?
நெற்பயிர், பதனீர், உயிர், பல்லாக்கு, பந்தயம், துணைவன். (நெதர்லாந்து)

www.tamilarangam.net

# இரண்டு மல்லர்கள்

ஓரூரில் முருகன் என்றொரு சண்டியன் இருந்தான். அவனுக்குத் தன் சண்டித்தனத்தில் மிகவும் பெருமையாக இருந்தது. யாரையும் வலுவில் சண்டைக்கு அழைத்துச் சண்டை செய்வான். சண்டைக்கு வராமல் விலகிச் சென்றாலும் விடமாட்டான். அவர்களைக் கோழைகள் என்று சொல்லிப் பரிகசித்துக், கெட்ட வார்த்தைகள் சொல்லித் திட்டுவான்.

இதனால் அவனைத் தூரத்தில் கண்டாலே சனங்கள் ஓடி ஒளிந்து கொள்வார்கள். தன் ஊரில் எல்லோருமே ஓடி ஒளிவதைக் கண்ட அவன், அயலூருக்குச் சென்றான். அங்கும் எல்லோரையும் வலுவில் சண்டை செய்ய அழைத்தான். தொடக்கத்தில் சண்டைக்கு வந்த சண்டியர்கள் எல்லோரும் அவன் வலிமையை அறியாது சண்டையிட்டுத் தோற்று ஓடினார்கள். அதனால் அவன் தனக்குத்தானே “மகாமல்லன்” என்று பட்டப்பெயரும் வைத்துக் கொண்டு போவோர் வருவோர் எல்லோரையும் சண்டைக்கு வரும்படி அழைத்தான்.

இதனால் கவலை கொண்ட சனங்கள் ஒன்று சேர்ந்து ஆலோசனை செய்தனர். கதிரேசன் என்னும் பெரியவர் அங்குள்ள மல்லர்களில்

www.tamilarangam.net

ஒருவரை அழைத்து அவனிடம், "நீ முருகனிடம் சென்று பந்தயத்துக்குச் சண்டை செய்கிறாயா? என்று கேட்டார். அவன் மறுத்தான். "நீ,தான் அவனைச் சண்டைக்கு அழைக்க வேண்டும். நான் வெல்லும் வழி சொல்லித் தருகிறேன்." என்று கூறிவிட்டு, அவனை அருகில் கூப்பிட்டு இரகசியமாகக் காதில் ஏதோ கூறினார். அவனும் ஒப்புக் கொண்டான்.

அடுத்தநாள் விடிந்ததும் மல்லன் எழுந்தான். முருகனின் இருப்பிடத்திற்குச் சென்றான். என்னுடன் சண்டைக்கு வருகிறாயா? என்று கேட்டான். முருகன் உடனேயே சண்டைக்கு வரக் கிளம்பினான். இப்போது வேண்டாம். இன்று மாலை சண்டையிடுவோம். யார் வெற்றி பெறுகிறார்களோ, அவர்களுக்குத் தோற்றவர் அடிமையாக வேண்டும் என்று நிபந்தனை போட்டான். முருகனும் ஒப்புக் கொண்டு தன் மீசையை முறுக்கினான்.மாலையும் வந்தது. சனங்கள் எல்லோரும் சண்டை நடைபெறும் இடத்துக்கு வந்தனர். ஊர்ப் பெரியவரான கதிரேசன் எழுந்து, "யார் மீசையில் மண் படுகின்றதோ அவர் தோற்றவராவார். அதிலேயே வெற்றி மதிப்பிடப்படும்" என்று கூறினார். சண்டை ஆரம்பமாயிற்று. மல்லனை எப்படியாவது குப்புற விழுத்த முருகன் எண்ணம் கொண்டான். மல்லன் தன் மீசையில் மண் படாமல் காப்பாற்றுவதிலேயே குறியாக இருந்தான்.

www.tamilarangam.net



முருகனின் ஒவ்வொரு அடியிலும் கீழே விழும்போது, தலையை நிமிர்த்தினான். இல்லாவிட்டால் நிமிர்ந்து படுத்துக் கொண்டான். முருகன் இதனால் களைக்கத் தொடங்கினான். ஒரு சமயம் மல்லனைக் கீழே தள்ளிவிட்டு முருகன் நிமிர்ந்து ஆறுதல் எடுத்தான். அதுதான் சமயம் என்று மல்லன் மெல்ல எழுந்து பின்புறமாகத் தள்ளிக் குப்புற வீழ்த்தினான். விழுந்த வேகத்தில் முருகனின் முகம் மண்ணில் அடிபட்டது.

மீசையிலும் மண் பட்டு விட்டது. மல்லனும் விழுந்தானாயினும் அவன் முருகனுக்கு மேலேயே விழுந்த படியால் அவன் தப்ப முடிந்தது. எழுந்த மல்லன் “விழுந்தாலும் மீசையில் மண் படவில்லையே” என்று வெற்றி முழக்கம் செய்தான். முருகன் தன் தோல்வியை ஒப்புக் கொண்டான்.

www.tamilarangam.net

# சமைத்து விட்டாளா?



தெருவில் உள்ள பெரிய மரத்தின் கீழே, நண்பர்கள் புடைசூழ ஊர் வம்புகள் பேசிச் சிரித்துக் கொண்டிருந்த முல்லாவுக்குப் பசி வயிற்றைக் கிள்ளியது. மெதுவாக எழுந்து நண்பர்களிடம் விடை பெற்றுக் கொண்டு வீடு நோக்கி நடந்தார். வீட்டுக்குள் நுழையும் போதுதான் மனைவி கடையில் விறகு வாங்கி வரச் சொல்லியது ஞாபகத்துக்கு வந்தது.

யாரையாவது கடைக்கு அனுப்பி விறகு வாங்கிச் சமையல் பண்ணி இருப்பாள்! என்று எண்ணிக் கொண்டு வீட்டுக்குள் நுழைந்தார். சமையல் அறைப் பரபரப்பு சமையல் அரைகுறையாக நடைபெறுவதைச் சொல்லாமல் சொல்லியது. மெதுவாக சமையல் அறைக்குள் எட்டிப் பார்த்தார். அவரைக் கண்டதும்

www.tamilarangam.net

மனைவி "அரசசபை முடிந்தாயிற்றா?'' என்று கேலியுடன் கேட்டார்.


மனைவியின் கேலிப்பேச்சைக் காதில் கேட்டும் கேட்காமலேயே கொட்டாவி விட்டார் முல்லா. மனைவிக்கு முல்லா பசியுடன் இருப்பது புரிந்தது. தேனீர் ஊற்றிக் கொடுத்து "ஒருதரம் கடைத்தெருவுக்கு நடந்து திரும்புங்கள். நீங்கள் திரும்பும் வேளையில் சமையல் முடிந்து விடும்.'' என்று கூறினார். முல்லாவும் தேனீரை வாங்கிக் குடித்துவிட்டுத் தெருவில் இறங்கி நடக்கத் தொடங்கினார். தெருவில் வருவோர் போவோரிடம் பேச்சுக் கொடுத்துக் கொண்டே தெருமுனை வரைக்கும் வந்து விட்டார். திரும்பி நடந்து போகக் களைப்பாக இருந்தது.

அப்போது முல்லாவின் எதிர்ப்பக்கமாக முல்லாவின் நண்பர் வந்து கொண்டிருந்தார். முல்லாவைக் கண்டதும் "உங்கள் வீட்டுக்குத்தான் வந்து கொண்டிருக்கிறேன். நீங்கள் எங்கே செல்கிறீர்கள்?'' என்று கேட்டார். தெருக்கடை வரை போய் வாருங்கள். சமையல் முடிந்து விடும் என்று மனைவி கூறினாள். "தெருமுனை வரை நடந்து வந்து விட்டேன். வீட்டுக்குத் தானே செல்கிறீர்கள். சமையல் முடித்து விட்டாளா? என்று வந்து சொல்லுங்கள்.'' என்று கூறிக் கொண்டே பக்கத்தில் இருந்த கல்லில் அமர்ந்து விட்டார். நண்பர் என்ன சொல்வது என்று தெரியாமல் திகைத்து விட்டார்.

www.tamilarangam.net

# நாட்டுப் பறவை மயில்


ஒவ்வொரு நாட்டுக்கும், நாட்டுக்கொடி, நாட்டுப்பண், நாட்டுவிலங்கு, நாட்டுப்பறவை எனக்



www.tamilarangam.net

றிப்பிடப்படும்படியாக ஒவ்வொன்று இருக்கும். நம்
ட்டுப்பறவையாக மயில் இருக்கிறது.

மயில் மிகவும் அழகானது. அது எல்லோரையும்
பரும் தோற்றம் கொண்டது. மயிலின் தலையில் சிறிய
ாண்டை ஒன்றுள்ளது. அதன் கழுத்து நீண்டு



www.tamilarangam.net

மெலிந்து காணப்படும். அதன் இறகுகள் பல வண்ணப் புள்ளிகளைக் கொண்டுள்ளன. நீண்ட கால்களைப் பெற்றுள்ள ஆண்மயிலுக்கு நீண்ட தோகை உண்டு. அதன் கால்கள் நொச்சி இலையைப் போல காணப்படும். பெண் மயிலுக்கு நீண்ட தோகை இல்லை. மயிலின் தோகையைப் பீலி என்றும் சொல்லுவார்கள். மயில் தோகையை விரித்து ஆடும். அக்காட்சி மிகவும் அழகானது.

காண்பதற்கு அழகுடன் காணப்படும் மயிலுக்கு கேட்பதற்கு ஏற்ற இனிமையான குரல் இல்லை. மயிலின் குரல் ஒலியை 'அகவுதல்' என்று குறிப்பிடுவார்கள். மயில் நெல், சோளம், பூச்சிகள், புழுக்கள் போன்றவற்றை உணவாக்கிக் கொள்ளும். மரக்கிளைகளில் அமர்ந்தவாறே நித்திரை செய்யும். மயிலால் மிக உயரத்தில் பறக்க இயலாது. ஆனால் நிலத்தில் மிக விரைவாக ஓடும். மயில் பயந்த சுபாவம் கொண்டது. கூர்மையான பார்வை உடையது. வெகு தூரத்தில் வரும் தனது பகைவர்களையும் கண்டு கொள்ளும்.

அழகுப்பறவையான மயிலை நாட்டியப் பறவை என்று கவிஞர்கள் வர்ணித்துக் கூறுவார்கள். தமிழ் இலக்கியங்கள்; மயிலை மஞ்ஞை, பிணிமுகம் என்னும் சொற்களால் குறிக்கின்றன. வண்ணமயில், நீலமயில், கோலமயில், கலாபமயில் எனப் பலவாறாக மயில் பாராட்டுப் படுகின்றது. உயிரோடு இருக்கும்போது எம்மைத் தன் அழகால் கவரும் மயில் இறந்த பின்னும் நமக்குப்

www.tamilarangam.net

பயன்படுகின்றது. மயிலில் உடலில் இருந்து எடுக்கும் எண்ணெய் மருந்துப் பொருளாகப் பயன்படுகின்றது.

மயில்கள் மலைப் பகுதிகளிலும், காடுகளிலும் அதிகமாகக் காணப்படும். இலங்கையிலும், இந்தியாவில் கூடுதலாகவும் மயில்கள் காணப்படுகின்றன. மயிலை இறைச்சிக்காகவோ, தோகைக்காகவோ கொல்வது சட்டப்படி குற்றமாகும். நாட்டியப்பறவையான மயில் நம் நாட்டுப்பறவையாக (தேசப்பறவை) இருப்பது நமக்குப் பெருமைதானே.

–கிரிசாந் மனோரஞ்சிதராஜா–

## காரின் நம்பர் எது?

கணக்கு வாத்தியார் சொன்னபடி முதல் இரண்டு இலக்கங்களைப் பின் மூன்று இலக்கங்களால் பெருக்கினால் அதே எண்களைக் கொண்ட விடை வரக்கூடிய ஐந்து இலக்க எண்கள் மொத்தம்12தான். அவற்றில் எந்த எண்ணிலும் எங்கும் 0 இல்லை. வெவ்வேறு மதிப்புக் கொண்டவை இந்தப் 12 எண்களும். ஆனால் அவற்றில் ஒன்றுக்கு மட்டுமே ஆரம்ப எண் ஒன்று. அது 14926. 14ஐ 926ஆல் பெருக்கினால் வரும்விடை 12964. மற்றப் பதினொரு எண்கள் முறையே 24651, 42678, 51246, 57834, 75231, 78624, 87435, 72936, 65281, 65983, 86251

www.tamilarangam.net

# அழிகின்ற தேசம்



வெளிச்சம் இருந்தும் இருண்டு இருக்கும் தேசம்
பொங்கிவரும் கடல் இருந்தும் வற்றிப் போய் இருக்கும் தேசம்
அதிகாலைக் கதிரவன் எழுந்தும் எழாமல் இருக்கும் தேசம்
இன்று அழிந்து கொண்டிருக்கிறது.

மனிதர்கள் இருந்தும் மிருகங்கள் உலாவுகின்ற தேசம்
பறவையாக இருந்தும் சிறகுடைந்து இருக்கும் தேசம்
இயற்கை அழகிருந்தும் வர்ணிக்க கவிஞர்கள் இல்லாத தேசம்
இன்று மறைந்து கொண்டிருக்கிறது.

இந்தத் தேசம் அழிந்திடுமா?
புதிய பறவை சிறகடித்துப் பறந்திடுமா?
மனிதன் மனித நேயத்துடன் வாழ்வானா?

– தி. சுதர்ஷினி –
டென்மார்க்

www.tamilarangam.net

# சார்லிசாப்ளின்



தான் சுகபோகத்தில் வாழ்ந்து கொண்டு இருந்த வேளையில் தன்னைப் பெற்றெடுத்த தாய் அங்கில்லையே என்ற கவலை இப்போது இல்லை. தாயைத் தன்னுடன் வைத்திருந்தது சார்லிக்கு மிகவும் சந்தோஷத்தைத் தந்தது. இதே வேளையில் சார்லி (The Idle Class) த ஐடில் கிளாஸ் என்ற படத்தை நடித்து முடித்திருந்தார். ஃபர்ஸ்ட் நேஷனல் நிறுவனத்தின் ஒப்பந்தப்படி சார்லி இன்னும் மூன்று படங்கள் நடித்துக் கொடுக்க வேண்டியிருந்தது. சார்லியின் சொந்த நிறுவனத்தைச் சார்லியால் கவனிக்க முடியவில்லை. அவரின் நண்பர்கள் அதன் நஷ்டங்களைப் பற்றிச் சார்லியிடம் கூறினார்கள்.

www.tamilarangam.net

இதே நேரத்தில் சார்லி தீ விபத்தொன்றில் அகப்பட்டார். சிறிது காயமானாலும் பத்திரிகைகள் பெரிதுபடுத்தி எழுதி விட்டன. இதனால் வெளிநாடுகளில் இருந்தெல்லாம், சார்லியின் சுகம் விசாரித்து நூற்றுக்கணக்கான கடிதங்கள், தந்திகள் வந்தன. தினத்தாள்கள் பெரிதுபடுத்தி எழுதின. அவற்றுள் புகழ் பெற்ற சிந்தனையாளரான H.G. வெல்ஸ் அவர்களின் கடிதம் சார்லியின் சிந்தனையைத் திசை திருப்பி விட்டது. ஒருதரம் லண்டனுக்குச் சென்று வரச் சார்லி தீர்மானித்தார்.

சார்லி லண்டன் புறப்படும் செய்திகள் தினத்தாள்களால் பல இடங்களுக்கும் பரவியது. வெல்ஸின் கடிதம் மட்டுமல்லாது, லண்டன் செல்வதற்கு இன்னொரு காரணமும் இருந்தது. ஹெட்டி கெல்லியைச் சந்திக்கும் வாய்ப்பையும் சார்லி இழந்துவிட விரும்பவில்லை. தன் மனதில் கன்னிக் காதலைத் தோற்றுவித்த ஹெட்டியை எத்தனையோ அழகிகளைக் கண்ட பின்னரும், சார்லியால் மறந்துவிட முடியவில்லை. லண்டனுக்குப் புறப்படுவதற்குச் சில நாட்களின் முன்தான் ஹெட்டி, தான் திருமணமாகி லண்டனில் வசிப்பதாகக் கடிதம் எழுதியிருந்தாள்.

www.tamilarangam.net

லண்டனில் சார்லி சந்தித்த பிரமுகருள் ஹெட்டியின் சகோதரரான ஆர்தர் கெல்லியும் ஒருவர். லண்டனுக்கு வந்தால் தன்னைச் சந்திக்கும்படி ஹட்டி எழுதியிருந்ததைச் சார்லி அவருக்கு நினைவு படுத்தினார். அவளை ஒருதரம் சந்திக்க விரும்புவதையும், சார்லி ஆர்தரிடம் கூறினார். சார்லி சொல்வதையெல்லாம் பொறுமையுடன் கேட்டுவிட்டு ஆர்தர் சார்லியிடம் கண் கலங்கியவாறே வேதனையுடன் "சார்லி, ஹெட்டியை நீங்கள் பார்க்க முடியாது. அவள் இறந்து விட்டாள். சார்லி செயலற்று நின்று விட்டார். பின் தன்னை மறந்து விக்கிவிக்கி அழுதார். அவளைக் காணாத ஏமாற்றம் அவரை நிலை கொள்ளாத வேதனைக்குட்படுத்தியது.

ரிட்ஸ் ஹோட்டலில் தங்கியிருந்த சார்லி வெளியே திரளாக இருந்த இரசிகர்களுக்குக் கையசைத்துத் தன் மகிழ்ச்சியையும் அன்பையும் தெரிவித்த பின் தான் ஓய்வெடுக்க விரும்புவதை அவர்களிடம் கூறினார். பின் தன் அறைக்கு வந்தவர் ஓய்வெடுக்கவில்லை. தான் வாழ்ந்த வீட்டையும் தெருவையும் காண நினைத்தார். மளமளவென்று உடையை மாற்றிக் கொண்ட சார்லி தன் பழைய நினைவுகளோடு தான் வசித்து வந்த பகுதியான கென்னிஸ்டன்சாலையை நோக்கி நடக்கத் தொடங்கினார்.

-தொடரும்-

www.tamilarangam.net

## பழமொழிகள் சில:

1. கைக்கெட்டியது வாய்க்கு எட்டவில்லை.

(கிடைத்ததை அனுபவிக்க முடியவில்லை.)

2. சாண் ஏற முழம் சறுக்கும்.

(சிறிது முன்னேற அதிகம் வீழ்ச்சி ஏற்படும்)

3. சிறு துரும்பும் பல் குத்த உதவும்

(எதனையும் இகழ்ச்சியாக எண்ணக் கூடாது.)

4. சூடு கண்ட பூனை அடுப்பங்கரையிற் சேராது.

(அனுபவம் ஆபத்து வராமல் காக்கும்)

5.திக்கற்றவனுக்குத் தெய்வமே துணை.

( யாரும் இல்லாதவனைக் கடவுள் காப்பாற்றுவார்.)

–சோபி. யோகராசா –
நோர்வே

www.tamilarangam.net

# பாலும் தண்ணீரும்



பாலன் அந்த வீட்டுக்குப் புதிதாக வேலைக்குச் சேர்ந்திருந்தான். எசமானின் குறிப்பறிந்து வேலை செய்ய வேண்டுமென அவனுடைய அப்பா சொல்லி விட்டிருந்தார். அப்பா அந்த வீட்டில் வேலைகாரனாக இருந்தார். அவருக்குக் காய்ச்சல் என்றபடியால் பாலன் சிலநாட்கள் வேலை செய்வதற்கு வந்திருந்தான்.

வீட்டுக்கு வந்த பால்காரனிடம் பாலை வாங்கிக் கொண்டு வந்து பாத்திரத்துக்குள் ஊற்றினான். அப்போது எசமானி அவனிடம், "பாலா பால் போத்தலுக்குள் பால் இருக்கிறது. பார்த்தாயா? சிறிது தண்ணீர் விட்டுக் குலுக்கி பாத்திரத்தில் ஊற்று." என்றாள். அவனும் அப்படியே செய்தான். அப்போது எசமானி அவனிடம் "எல்லாவற்றிலும் சிக்கனமாக இருக்க வேண்டும்" என்று கூறினாள்.

www.tamilarangam.net

அடுத்தநாள் எசமான் தன்னோடு பாலனை அழைத்துக் கொண்டு காரில் சந்தைக்குச் சென்றார். சென்று திரும்பும்போது காரில் பெற்றோல் குறைவாக இருந்தது. எசமான் அவனைப் பார்த்து "காரின் பின்பக்கம் இருக்கும் டின்னில் பெற்றோல் இருக்கிறது. அதை எடுத்துக் காருக்கு விடு. போகும் வழியில் பெற்றோல் நிலையத்தில் கூடுதலாகப் பெற்றோல் அடிக்கலாம்" என்றார். தலையை ஆட்டியவாறே கீழே இறங்கிய பாலன் பெற்றோலைக் காருக்கு விட்டான். பின் சிறிது தண்ணீரை டின்னுக்குள் விட்டுக் குலுக்கிக் காருக்கு விட்டான். எசமான் வந்து காரில் ஏறிப் புறப்பட்டார். கார் கிளம்பாமல் இருக்கவே பாலனிடம் விசாரித்தார். பாலன் சிரித்துக் கொண்டு தான் தண்ணீர் விட்டதை அவரிடம் கூறினான். எசமான் திகைத்து நின்றார். பாலனும் ஏதும் புரியாமல் நின்றான்.

ஹஹஹ —

**காற்றுக்கு எதிராகப் போராடிய பிறகே பட்டங்கள் உயரே பறக்கின்றன. கஷ்டங்களை எதிர்த்துப் போராடுகிறவர்கள் பட்டங்களைப் போல உயர்வார்கள்.**

**— வின்ஸ்டன் சேர்ச்சில் —**

ஹஹஹ

**மொழி என்பது பண்பாட்டின் கதவு. இந்தக் கதவு அடைக்கப்பட்டு விட்டால் நம் பண்பாடுகளையும்,**

www.tamilarangam.net

# மலையும் மணியும்.



அரசர் அரண்மனையில் வீற்றிருந்தார். அன்று குடிமக்களுக்குரிய தினமான படியால் குடிமக்கள் தங்கள் தங்களுக்குரிய குறைகளை அரசரிடம் கூறினார்கள். அரசரும் அவற்றிற்குரிய பரிகாரங்களைச் செய்வதாகக் கூறினார். அவர்களுள் மணியும் ஒருவன். அவனுக்குத் தாயும் தந்தையும் இல்லை. குடியிருந்த நிலமும் அயலில் உள்ளவர்கள் பறித்து விட்டார்கள். அன்றாட உணவுக்கே கஷ்டப்பட்டான்.

அரசரின் முன் வந்த மணி "அரசே, எனக்கு நல்ல உணவு தாருங்கள். மலையையே தலையில் வைத்துக் காட்டுவேன்" என்றான். அவன் சொல்லுவதைக் கேட்டதும் அரசருக்குச் சிரிப்பு வந்தது. ஆனாலும் அதை அடக்கிக் கொண்டே, "நல்ல உணவு எவ்வளவு

www.tamilarangam.net

நாட்களுக்கு வேண்டும்?” என்று மணியிடம் கேட்டார். யோசித்தான் மணி. ஆறு மாதத்திற்குள் ஏதாவது வேலை வந்து விடாதா! என்ன! என்றெண்ணியவாறே, “ஆறு மாதத்திற்கு உணவு தாருங்கள்.” என்றான்.

அரசரும் மணிக்கு நல்ல உணவும், படுக்கையும் கொடுத்தார். மணியும் நல்ல மகிழ்ச்சியுடன் வாழ்ந்து வந்தான். தான் வேலை தேடும் எண்ணத்தையும் மணி மறந்து விட்டான். ஆறு மாதமும் கழிந்தன. அரசரும் மந்திரி, சேனாதிபதி, அரண்மனை வேலையாட்கள் எல்லோரையும் அழைத்துக் கொண்டு மணியிடம் வந்தார். அவனையும் தன்னுடன் சேர்த்துக் கொண்டு மலை அடிவாரத்துக்கு வந்தார். மணிக்கு எல்லாமே விளங்கி விட்டது. பேசாமல் நின்றான்.

அரசர் மணியைப் பார்த்துச் சிரித்தார். பின் “நீ கேட்டபடி ஆறு மாதமும் நல்ல உணவு தந்தேன். சரி, இந்த மலையைத் தூக்கித் தலை மேல் வைத்து உன் பலத்தைக் காட்டு. இல்லையென்றால் சிறைத் தண்டனை தான்.” என்றார். மணியின் புத்தி வேலை செய்தது. மறுத்துவிட முடியவில்லை. மலையை எத்தனை பேர் சேர்ந்தாலும் அசைக்க முடியாதே!. எனவே அரசரைப் பார்த்து “அரசே, நான் எதற்கும் சம்மதம். மலையைத் தலையில் வைப்பேன்

www.tamilarangam.net

என்றது உண்மைதான். யாராவது பெயர்த்துத் தூக்கித் தலையில் வைத்தால் சுமக்கிறேன்" என்றான்.

மணியுடைய சமயோசித புத்தியைக் கண்டு அரசர் மகிழ்ந்தார். அரண்மனையிலேயே மணிக்கு வேலையும் கொடுத்தார்.

## இதோ நொடிகள்!

1. முண்டாசுக்காரனுக்குக் கை கால் இல்லை.
2. தெருக்கரையில் உள்ள மரம், பகலில் தூங்கி இரவில் விழிக்கும்.
3. பார்க்கும் கண் இரண்டு. பாராத கண்கள் பல.
4. அண்ணன் இழுப்பான். தம்பி சுமப்பான்.
5. தொட்டுப் பார்த்தால் பேசாமல் இருக்கும். உரசிப் பார்த்தால் சீறி விழும்.

## விடைகள்..

1. குண்டுசி, 2. மின்கம்பம், 3.மயில் 4. குதிரையும் கழுதையும் 5. தீக்குச்சி.

-ஜெயசாந் மனோரஞ்சிதராஜா-

www.tamilarangam.net

# சொற்களைக் கண்டு பிடியுங்கள் முடிவு

| | | | |
|---|---|---|---|
| இ – வ | பாதம் | அரவு | மரை |
| வாசல் | | கதை | கல் |
| படி | மே – கீ | வடு | |
| அணி | வானவில் | | கீ – மே |
| விளம்பு | வில் | வ – இ | பாடு |
| புரு | வில்லங்கம் | அன்னை | வனிதை |
| குறை | கம் | சுட்டி | கதவு |
| மெத்தை | கம்பம் | பல் | ஆரவாரம் |
| தைப்பொங்கல் | சரை | அரை | வாரம் |
| பொங்கல் | கடல் | கறை | தரம் |
| கல் | பணி | குரு | கறை |
| லயம் | புதை | மெல் | பனை |
| காது | புதையல் | கம்பம் | பாம்பு |
| தும்பம் | ரதி | காயம் | வனம் |
| பல் | குரை | வனம் | பொருள் |
| கரகரப்பு | பொது | புல் | மதி |
| கரப்பு | விழி | வரம் | திறப்பு |
| திறமை | சுளகு | வரம்பு | காப்பு |
| படங்கு | பறை | கம் | குதி |
| குதி | வரம் | ஆரம் | திரல் |
| ஆடு | கல் | விதி | கரவு |
| கரை | ஆம் | பாழி | |

www.tamilarangam.net

# வினாவிடைப் போட்டி

1. இரண்டு உலகப் போரிலும் எந்த நாடுகளுடனும் சேராது நடுநிலை வகித்த நாடு இது!
சுந்தரம், குளவி, சொற்பம், ஸர்ப்பம், பயிர்ப்பு, எல்லாம், ஆந்தை, துணை.

2. அமெரிக்க ஜெனாதிபதியின் வசிப்பிடம் வெள்ளைமாளிகை என்பது எல்லோருக்கும் தெரியும். ஆனால் இந்த ஜெனாதிபதி மட்டும் விதிவிலக்காகி விட்டாரே!
ஜோசியர், பயிர், இராஜ்ஜியம், வாழை, ரிஷி, பங்கம், பட்டம், அன்பு.


3. உலகப் புகழ் பெற்ற இந்த மாவீரருக்குப் பூனை என்றாலே பயம்!
நெஞ்சம், காப்பு, போத்துக்கல், பல்லி, பயன், அன்னம்.

4.க்ராப்.். ட்ராக்குலா (Graf Dracula) வின் இருப்பிடமாக கதையில் சொல்லப்பட்ட ற்ரன்சில்வானியா (Transylvanien) எந்த நாட்டில் உள்ளது?
ரூபாய், மேலைநாடு, இனிமை, வியாபாரம்.

4. கிறீஸ்துவ மதத்தின் கொண்டாட்டங்களுள் கிறிஸ்மஸ் தினம் முக்கியம் கொண்டது என்பதை நீங்கள் அறிவீர்கள். ஆனால் அதை விடவும் முக்கியமான கொண்டாட்டம் இது. தெரிகின்றதா?
ஈதல், சரஸ்வதி, வீரம், கர்ச்சனை.

முடிவு திகதி: 10.06.97

www.tamilarangam.net




NEKTAR FÜR KINDER

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்